Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 51

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 20 துல்கஃ பிறை 29 (2-4-65) வெள்ளிக்கிழமை

### இடமாற்ற சபைத் தலைவர் இடமாற்றம்

கொழும்பு, வியாழன்
கல்வி இலாகாவில் ஆசிரிய இடமாற்றச் சபைத் தலைவராகக் கடமையாற்றிய உதவித்தியாதிபதி திரு வி. துரைசிங்கம் இன்றுமுதல் மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன் சொனென்ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# கல்விசேவைக் கமிஷன் நியமிக்கத் திட்டம்

## அறிக்கை தயாரிக்க மந்திரி உத்தரவு

### ஆசிரியர் இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டன

கொழும்பு, வியாழன்

**ஆசிரியர் நியமனம், இடமாற்றம், கட்டுப்பாடு ஆகியவைகள் பற்றிய அலுவல்களைக் கவனிப்பதற்கு ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் போன்று கல்விச் சேவைக் கமிஷன் ஒன்றை நியமிப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல தனது அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உத்தரவிட்டுள்ளார்.**

கல்விச் சேவைக் கமிஷன் நியமிப்பது சம்பந்தமான இறுதி முடிவு எடுக்கப்படும் வரை, இதற்குமுன் திட்டமிடப்பட்டிருந்த ஆசிரியர் இடமாற்றங்கள்யாவும் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமெனவும் கல்வி மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

ஆசிரிய சேவையில் திருப்தி ஏற்படுத்துவதே தமது நோக்கமென்று அவர் தெரிவித்தார். ஆசிரியர் இடமாற்ற முறையில் ஆசிரியர்களுக்கிடையில் பெரும் அதிருப்தி நிலவி வந்துள்ளதாகவும் பாரபட்சமான முறையில் ஆசிரியர் இடமாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் மந்திரி கூறினார். கடந்த ஆறுமாத காலத்துக்குள் ஆசிரியர் இடமாற்றங்கள் மிகமோசமான முறையில் நடைபெற்றதாகவும் அவர் சொன்னார்.

---

## ஆசிரியர்களின் விதவைகள் அனாதைகள்

# பென்ஷன் 25 %. உயர்வு

கொழும்பு, வியாழன்

**ஆசிரியர்களின் விதவைகள், அனாதைகள் ஆகியோரின் பென்ஷன் ஏப்ரல் முதல் திகதியான இன்று முதல் இருபத்தைந்து சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.**

ஆசிரியர்களின் விதவைகள், அனாதைகளின் பென்ஷன் 25 சதவீதம் அதிகரிக்கும்படி புதிய நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா தமது அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இப்பொழுது அவர்கள் பெறும் அடிப்படைப் பென்ஷன் தொகையிலிருந்து இந்த உயர்வு அளிக்கப்படும். கோல்டன் ஸ்மித் என்ற பிரிட்டிஷ் நிபுணர் ஒருவர் செய்த சிபார்சை ஆதாரமாகக் கொண்டு இந்தப் பென்ஷன் உயர்வு அளிக்கப்படுகிறது. இந்தச் சிபார்சு அடங்கிய அறிக்கை நீண்ட காலத்துக்கு முன்னரே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பென்ஷன் உயர்வு ஆசிரியர்களில் தங்கியுள்ள பலர் அதிக நன்மை பெறுவர் என்று நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## சூ-ஷேக் சந்திப்பு பற்றி இந்தியா அதிர்ச்சி

### இன்று அறிக்கை வெளியாகும்

புதுடில்லி, ஏப்ரல் 1

**திரு. ஷேக் அப்துல்லா சீனப் பிரதமர் சூ-என்-லாயுடன் அல்ஜீயர்ஸில் பேச்சு நடத்திய விஷயத்தை இந்திய அரசாங்கம் பாரதூரமாகக் கருதுகிறது என பிரதம மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி இன்று லோக சபையில் கூறினார்.**

லோகசபை அங்கத்தினர்கள் இச்சந்திப்பு பற்றி இன்று மிகவும் கவலை தெரிவித்தார்கள்.

அப்துல்லாவின் பாஸ்போர்ட் ரத்துச் செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரினார்கள்.

ஒரு கட்டத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கும், இதர எம். பி.க்களுக்குமிடையே அப்துல்லா விஷயமாக காரசாரமான வாக்குவாதம் எழும்பியது.

திரு. ஷேக் அப்துல்லா திரும்பும் போது இந்தியாவிற்குள் அவரை அழைக்கக் கூடாதென அங்கத்தினர்கள் சிலர் கூறினர். ஆனால் இதை விடக்கடுமையான நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்கப்படவிருப்பதாய் அரசாங்கத்தரப்பில் கூறப்பட்டது.

வெளிநாட்டு மந்திரி சுவர்ண் சிங் இதுபற்றி நாளை ஒரு அறிக்கை வெளியிடுவார் என பிரதமர் சாஸ்திரி கூறினார்.

சூ-என்-லாய்—ஷேக் அப்துல்லா சந்திப்பைக் குறித்து அரசாங்கம் மிகத் தீவிரமான கருத்துக் கொண்டிருப்பதாய்க் கூறிய பிரதமர், இவ்விஷயமாக என்ன நடவடிக்கை எடுப்பது என்று அரசாங்கம் பரிசீலிக்கும் என்றார்.

வெளிநாட்டு மந்திரி நாளை விரிவான அறிக்கை வெளியிடவிருப்பதாயும் அவர் கூறினார்.

பிரஜா சோஷலிஸ்ட் அங்கத்தினர் திரு. ஹேம்பருவாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்விஷயமாக அல்ஜீயர்ஸிலுள்ள பாரததூதராலயத்திலிருந்து அதிகாரபூர்வமான தகவல் இல்லை என்றும் எனவே நாளை அறிக்கை வெளியிடவிருப்பதாயும் திரு. சுவர்ணசிங் கூறினார்.

---

## 'தலைமை தாங்குவேன்'

### சிறீமா அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தொடர்ந்து தலைமை தாங்குவது மட்டுமின்றி பார்லிமென்டில் எதிர்க்கட்சிக்கும் தலைமை தாங்குவேன்" என்று முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயகா ஹொரகொல்லையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி.க்கள் மத்தியில் பேசுகையில் கூறினார். தேர்தலுக்குப் பின் முதல் தடவையாக நடைபெற்ற இச்சந்திப்பின் போது இருவரைத்தவிர இதர சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் அனைவரும் வந்திருந்தனர்.

திருமதி பண்டாரநாயகா மேலும் பேசுகையில், இப்பொழுதுள்ள அரசாங்கத்தை மட்டுமல்ல, பகைமையான பத்திரிகைகளையும் எதிர்த்து போராட வேண்டியுள்ளது என்று கூறினார்.

---

## பிரதமருக்கு நன்றி

மாவிட்டபுரம், வியாழன்

திரு. டட்லி சேனநாயக்கா பிரதமமந்திரி பதவி ஏற்றுள்ளதற்குப் பாராட்டுத் தெரிவித்து அவருக்கு காங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. க. கிருபாமூர்த்தி ஒரு தந்தி அனுப்பியுள்ளார். அத்தந்தியில் காங்கேசன் துறை துறைமுகத்தைக் கட்டுவதற்கும் சிமெந்துத் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதற்கும் துரித நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

---

## சென்ட்சபை முதல்வர்

கொழும்பு, வியாழன்

வர்த்தக கைத்தொழில் மந்திரியான செனேட்டர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ் செனட்சபை முதல்வராக கடமையாற்றுவார். இத்தகவலை செனட்சபை தலைவர் தெரிவித்துள்ளார்.

செனட்சபை எதிர்க்கட்சித் தலைவரின் பெயர் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

[illegible] ... ளர் உத்தரவிட்டுள்ளார்.

---

## 2 அவுன்ஸ் மாசி

கொழும்பு, வியாழன்

முதல் பங்கீட்டு [illegible] புத்தகம் (சாதாரணம்) [illegible] மாதம் இரண்டு அவுன்ஸ் மாசி

---

## காங்கேசன் துறைமுகத்தில்

# பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை

### உதவி உணவுக்கமிஷனர் உறுதி

மாவிட்டபுரம், வியா.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் பாலம் ஒன்று அமைப்பது பற்றி தாம் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சி செய்வதாக இன்று யாழ்ப்பாணத்துக்கும் காங்கேசன்துறைக்கும் விஜயம் செய்த உதவி உணவுக் கமிஷனர் திரு. பி. வி. பெரேரா தெரிவித்தார்.

உதவிக்கட்டுப்பாட்டதிகாரி திரு. வி. ஓ. வீரக்கூனுடன் விஜயம் செய்த திரு. பெரேரா யாழ்ப்பாணத்தில் சரக்கு இறக்கிக்கொண்டிருக்கும் கப்பலையும் அங்கு நடைபெறும் வேலைகளையும் பார்வையிட்டார். கொழும்புத் துறைமுகத்தில் நடைபெறும் வேலையை விட இங்கு தொழிலாளர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்வதாக அவர் பாராட்டினார்

இதன்பின் திரு. பெரேரா காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு விஜயம் செய்தார். அங்கு காங்கேசன்துறைப் பட்

(6-ம் பக்கம் பார்க்க)

---

# பிரதமருக்கு திருமலையில் பொதுவரவேற்பு

திருக்கோணமலை, வியாழன்

பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கு பொது வரவேற்பளிப்பதென்று திருக்கோணமலை நகரசபை தீர்மானித்துள்ளது.

பிரதமர் டட்லி சேனநாயகாவும் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வமும் திருக்கோணமலைக்கு விஜயம் செய்யும் பொழுது அவர்களுக்குப் பொது வரவேற்பு அளிப்பது என்ற தீர்மானம் திங்கட்கிழமை நடைபெற்ற நகரசபையின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. இத்தீர்மானத்தை திரு. ஆர். சோமசுந்தரம் கொண்டுவந்தார். திரு. லூக்காஸ் ஆமோதித்தார். இலங்கையின் பிரதம மந்திரிக்கும் ஒரு மந்திரிக்கும் திருக்கோணமலை நகரசபை பொதுவரவேற்பளிப்பது இதுதான் முதல் தட்வையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

கருத்து வேற்றுமைகளை விரோதமென்று கொள்ளப்படாது. உலகிலே கருத்து மாறுபாடில்லாத இருவரை நான் அறியேன். என்னிலிருந்து மாறுபட்ட கருத்துள்ளவரிடமும் கீதை உபதேசத்தைப் பின்பற்றும் நான் மேலான அன்பையே காட்டுகின்றேன்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 789.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 20 உ. (2-4-65)

## தமிழ் சமூகத்துக்கு மீண்டும் ஆபத்து

ஈழத்திலுள்ள தமிழ் சமூகத்துக்கு மீண்டும் பெரிய ஆபத்து ஏற்படுவதற்கான அறிகுறிகள் அரசியல்வானில் தோன்றியுள்ளன. இந்த ஆபத்துகளை உணர்ந்து இதைத் தவிர்க்கவும் சமூகத்தின் நன்மையைப் பாதுகாக்கவும் சிறப்பாக தமிழ்த் தலைவர்களும் பிரதிநிதிகளும் கூடுமானதை உடன் செய்வரென்றே தமிழ்மக்கள் கவலையுடனும் ஆவலுடனும் எதிர்பார்க்கின்றார்கள்.

சென்ற ஒன்பது ஆண்டுகளாக மந்திரிசபையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு இடமில்லாது போயிற்று. அவ்விதமே வகுப்புவாதம் அரசாங்கக் காரியாலயங்களிலும், நாட்டிலும் பரவ அதிக இடமளித்தது. பொதுத் தேர்தலுக்குப்பின் அந்த நிலைமாறி தமிழர்களுக்கும் மந்திரிசபையில் இடம்கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டும் அதைத் தமிழ்த் தலைவர்கள் பூரணமாகப் பயன்படுத்தாமல், பயன்படுத்த முடியாமலோ இருக்கும் நிலை தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றமளித்துள்ளது.

ஆபத்தேற்பட்டுள்ள காலத்தில் தமிழ்த் தலைவர்கள் கட்சி முதலிய வேற்றுமைகளை மறந்து ஒற்றுமைப்பட வேண்டியது மிகமிக அவசியம். சமூக நன்மைக்காக கட்சி நன்மையைத் தியாகம் செய்யவேண்டுமென்று மகாத்மாகாந்தியடிகள் அறிவுறுத்தி இருக்கின்றார். மகாத்மாவின் இந்த உபதேசப்படி நடப்பதாயின் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் பழைய வேற்றுமைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, சமூகநன்மைக்காக ஒத்துழைக்க முன்வர வேண்டும். குறுகிய அரசியல்வாதங்களை விட்டு அரசியல் விவேகத்துடனும் ஞானத்துடனும் நடக்க தலைவர்கள் முன்வர வேண்டுமென்பதே தமிழ்ச்சமூகத்தின் முக்கிய விருப்பமாகும். இதுவே தலைவர்களின் மேலான கடமையுங்கூட.

பதினேழுபேர் அடங்கிய மந்திரிசபையில் ஒரேஒரு தமிழர்தான் இடம்பெற்றுள்ளார், 17 உதவி மந்திரிகளில் தமிழர் ஒருவர்கூட இல்லை. ஜனத்தொகை விகிதாசாரப்படி பார்த்தால் தமிழருக்கு ஐந்து மந்திரிப் பதவிகளும் ஐந்து உதவிமந்திரிப் பதவிகளும் கிடைக்க வேண்டும். பிரதமர் டட்லி தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தை மந்திரியாக நியமிப்பதாகக் கூறியும், அவர் என்ன காரணத்தாலோ அதை ஏற்க மறுத்துவிட்டார். உரிமைகள் கிடைக்காதவரை மந்திரிப் பதவிகளைப் பூரணமாக ஏற்பதில்லை என்று தமிழரசுக்கட்சியும் தயங்குவதாகத் தெரிகிறது. காரணம் எதுவாயிருப்பினும் மந்திரிசபையில் போதிய தமிழர் இல்லாதது தமிழ் சமூகத்துக்கு நன்மையாகமாட்டாது.

தமிழரசுக்கட்சியினர் கேட்ட சில நிபந்தனைகளை பிரதமர் டட்லி ஒப்புக் கொண்டுள்ளதாயும் அதன்மீதே தமிழரசுக் கட்சி தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் ஐ. தே. கட்சிக்கு அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. அந்த நிபந்தனை விபரங்கள் தெரியவில்லை. அவை வெளியானதும் அதை சாக்காக வைத்து வகுப்பு கலவரங்களைக் கிளப்ப சில எதிர்ப்புச் சக்திகள் காத்துள்ளதாகக் கூறப்படுகிறது. மொழி, பிரதேசசபை, குடியேற்றஉரிமை, மலைநாட்டுத் தமிழர் முதலிய பிரச்சினைகளை கட்சி முறையின்றி தேசிய முறையில் தீர்ப்பதே உசிதமும் அதிக பத்திரமுமாகும். பழைய அனுபவங்கள் இதை அறிவுறுத்துகின்றன.

ஆகவே இவ்விஷயங்களைப் பற்றி ஆராய நேற்று நாம் கூறியதுபோல் ஓர் அரசியல் நிர்ணயசபையையோ, வட்டமேசைமகாநாட்டையோ கூட்ட வேண்டும். கருத்து வேற்றுமைக்கு இடமான இவ்விஷயங்களை அவ்விதம் தேசிய தீர்வுக்கு ஒத்திவைத்துவிட்டு, உடனடியாக மக்களின் பல அவசரப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவதாயின் சூழ்நிலை மேலாகி மற்றப் பிரச்சினைகளும் சுலபமாகத் தீர உதவியாக இருக்கும். இதற்கிடையே இரு தமிழ்க்கட்சித் தலைவர்களும் பழைய வேற்றுமைகளை மறந்து, சமூக நன்மைக்காக ஒத்துழைக்க இறைவன்தான் வழிகாட்டவேண்டும். இதுவே இச்சமயம் ஈழத்தமிழ் மக்களின் மனப்பூர்வமான பிரார்த்தனை. தமிழ்மக்கள் தங்கள் மேலான தீர்ப்பை அளித்துவிட்டனர். இருகட்சித் தலைவர்களும் வேண்டுமென்பதே அவர்கள் தீர்ப்பு. தலைவர்கள் ஒத்துழைத்து தமிழ் மக்களுக்குத் தங்கள் கடமையைச் செய்ய முன்வருவார்களா?

# செந்தமிழ் வளர்த்த தேசிய வாதி “ஈழகேசரி பொன்னையா”

— இ. நாகராஜன் —

“திருப்தி குடியிருக்கின்ற திருமுகத்தை இற்றைக்கு இருபத்திரண்டு வருடங்களுக்கு முன் கோப்பாய் அரசினர் ஆசிரியர்கலாசாலையிலே முதன் முதல் தரிசனஞ் செய்தேன். அந்த முகம் அழுக்காற்று அக்கினியிலே வாடாமல் அச்சம் முதலிய புழுக்கடிகளாலே அழகு போகாமல், நம்பிக்கை என்கின்ற இதழ்கள் விரித்துத் துணிவாகிய நறுமணம் வீசி அன்றலர்ந்த புஷ்பம் போலே எவரையும் வசீகரித்து விளங்கியது. நான் அந்த மலர் முகத்தை அடிக்கடி உற்று நோக்கினேன். அம்முகம் பல வருடங்கள் பழகியது போன்று என்னுடன் அளவளாவிட்டது. இருவருக்கும் நட்பு ஏற்பட்டுவிட்டது அன்றைக்கு எனக்குக் கிடைத்த நட்புக்கு அந்த முகவசீகரமன்றி, வேறு என்ன இருக்கிறது என்று இன்றைக்குந்தான் தெரியவில்லை.”

இவ்வாறு ஒருவருடைய முகத்தைபபற்றியும், இவ்விருவருக்கிடை ஏற்பட்ட நட்பைப் பற்றியும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் அழகுற இதயபூர்வமான அன்பை வெளியிட்டு 1951-ம் ஆண்டில் ஒரு கட்டுரையில் எழுதியுள்ளார். அந்த அன்பு சொரியும் புகழும் பாத்திரமான திருமுகத்தை உடையவர்தான் செந்தமிழ் வளர்த்த ஈழகேசரி பொன்னையா அவர்கள்.

ஏறக்குறைய 28 ஆண்டுகளாக இலங்கையின் அரசியல், கலை, இலக்கியம், கலாச்சாரம் என்பனவற்றின் திருத்தூதுவனாக விளங்கிய 'ஈழகேசரி'ப் பத்திரிகையையும், அதன் ஸ்தாபகரான பொன்னையா அவர்களையும் தனித்தனி பிரித்துவிட முடியாது. அத்வைதமாகி இரண்டும் இன்று 'ஈழகேசரி'ப் பொன்னையா என்ற ஒரு தனிச் சொல்லில் அமைந்துள்ளன.

ஏறக்குறைய 35 வருடங்களுக்குமுன் உலகம் இருந்த நிலை வேறு. இன்று சுதந்திரத்துடன் இலங்குகின்ற பல நாடுகள் அன்று அடிமைபட்ட நிலையில் கிடந்துழன்றன. இவ்வழிநிலையை நீக்கிவிட சுதந்திரநாதமிசைத்துப் பாரதநாடு முன்னணியில் நின்றது.

“எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு-நாம்
எல்லோரும் சமமென்பது
உறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி
ஊதுவோமே-இதைத்
தரணிக்கெல்லாம் எடுத்து
ஓதுவோமே”

என்ற அமரகவி பாரதியின் சுதந்திர ஓசை ஈழத்து மக்களின் செவியிலும் விழுந்தது. எங்கும் சுதந்திர உணர்ச்சியினால் உந்தப்பட்ட தொண்டர் தோன்றினர். இத்தகைய உணர்ச்சித் தொண்டர்களுக்கு உத்வேகம் ஊட்டும் சாதனமாகவே 'ஈழகேசரி' விளங்கியது.

இப்பத்திரிகையை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டளவில் இலங்கை அரசியலில் ஈடும் எடுப்பும் இல்லாத அரசியல்வாதியாகத் திகழ்ந்த திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாகவே திரு பொன்னையா அவர்கள் தொடக்கினர்.

பத்திரிகை இன, வகுப்பு, மதத்துவேஷமற்ற தேசிய ஒருமைப்பாட்டையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டுமென்பதே பொன்னையா அவர்களின் பண்பு. இத்தகைமைய நாட்டின் ஆக்கத்துக்கு வழிகோலமுனைந்தார். வெறுமனே அரசியல் உணர்ச்சியை மட்டுமல்ல, யாமறிந்த மொழிகளிலே சிறந்ததான தமிழ் மொழியை வளர்த்துவரும் தொண்டையும் இவர் மேற்கொண்டார். இதன் காரணமாகவே பத்திரிகையைத் தொடங்குவதற்கு முன்னே சுன்னாகத்தில் தலைலக்குமி புத்தகசாலையையும், திருமகள் அச்சகத்தையும் முறையே 1926- 29-ம் ஆண்டுகளில் ஆரம்பித்திருந்தார்.

தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் வளர்தாற்றான் தமிழினம் வாழ்ந்ததாகும் என்ற கருத்தின் அடிப்படையில் 1937-ம் ஆண்டளவில் தமிழ் இலக்கணத்தில் மிகத் தொன்மையானதும் உயர்தரமானதுமான தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தை மகாவித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்களின் உரைவிளக்கக் குறிப்புக்களுடன் திரு. சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் ஞாபகார்த்தமாக முதன் முதல் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து [illegible] களையும் தமிழ் நாட்டுக்கே பெரு[illegible] பதிப்பித்தார். இத்தொல்காப்பியப் பதிப்பின் சிறப்பை உணர்ந்த நல்லூர் வண. பிதா ஞானப்பிரகாசர் அவர்கள் தமது 'சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியைத் திருமகள் அழுத்தகத்திலேயே பதிப்பிக்க முன்வந்தார். அதில் முதல் ஆறு பகுதிகளும் மிகச் சிறந்த வெளியீடாக பதிப்பிக்கப்பட்டன.

இவ்வாறு தமிழுக்கும் தமிழ் இலக்கிய இலக்கணத்துக்கும் பெரும் சேவை செய்த பொன்னையா அவர்கள் மகாத்மா காந்திஜி இலங்கைக்கு விஜயம் செய்த காலந்தொட்டு அவர் வழியில் தேசிய உணர்ச்சியை ஊட்டும் பணியை மேற்கொண்டார். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட வாலிப மகாநாட்டின் முன்னணி அங்கத்தினராகி மகாநாடு சிறப்புடன் விளங்குதற்குக் காரணரானார்.

“பெற்ற தாயும் பிறந்த
பொன்னாடும்
நற்றவ வானிலும்
நனி சிறந்தனவே”

இந்த அமர வாசகத்துக்கமைய தனது பிறந்த கிராமமான குரும்பசிட்டியை நன்னிலைப் படுத்த 1936-ம் ஆண்டளவில் கிராமச்சங்க அங்கத்தவராகி பணியாற்ற ஆரம்பித்தார். 1946-ம் ஆண்டளவில் மயிலிட்டி கிராமச்சங்க தலைவராகி இறக்கும்வரையும் அப்பதவியையுடையவராக விளங்கினர். ஒரு துறையில் மட்டுமல்ல, சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான பல துறைகளிலும் புகுந்து பணிபுரிய வேண்டுமென்பது இவரிடம் விளங்கிய பண்பாகும்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது நாட்டில் பஞ்சம் தலைகாட்டி எல்லோரையும் வாட்டியது. உணவுப் பொருள் பற்றாக்குறையினால் சகலரும் துயருற்றனர். இந்நிலையில் 1941-ம் ஆண்டளவில் வயாவிளானில் 12 ஏக்கர் நிலத்தை வாங்கி இயந்திரசாதன உதவியுடன் பெருமளவில் உணவுப் பொருள் விருத்தி செய்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாயப் புரட்சியொன்றை ஏற்படுத்தினர். இவர் நடாத்திய விவசாயப் பண்ணை யாழ்ப்பாண விவசாயிகளுக்கும், அரசாங்கப்பகுதிகளுக்கும் பல புது அனுபவங்களை உண்டாக்கியது.

“ஊருணி நீர் நிறைந்தற்றே
உலகவாம்
பேரறிவாளன் திரு”

இவரது செல்வமும் உலகத்துக்குப் பயனளித்தன. இன்று குரும்பசிட்டியில் கம்பீரத்துடன் காட்சியளிக்கும் சன்மார்க்கசபை மண்டபம் அவரின் இலட்சியப்பணிக்கோர் ஷ்தம்பமாக விளங்குகின்றது. ஈழத்தின் முன்னணியில் விளங்கும் எழுத்தாளர், கவிஞர்களுள் பலர் 'ஈழகேசரி'ப் பண்ணையில் வளர்ந்து செழித்தவர்கள். கலை, கலாச்சார ஸ்தாபனங்கள் பல இவரது உழைப்பையும் பொருளையும் அன்று பெற்று வளர்வுற்றுள்ளன என்று சீவியவந்தர்களாக உள்ள பிரமுகர்கள் பலர் தெரிவிக்கின்றார்கள்.

### வாழ்க்கைச் சுருக்கம்

22-6-98ல் குரும்பசிட்டியில் திரு நாகமுத்தர் என்னும் விவசாயியின் புத்திரனாகப் பிறந்தார். அசாத்திய துணிவும், குறிக்கோளுமுடைய இவர் விவசாயத்தை விரும்பாது பத்திரிகை படிப்பதிலும், பிறசேவைகளிலும் நாட்டம் கொண்டார். அக்காலத்தில் அச்சுத்தொழில் பயிற்சிபெற 'சுதேச நாட்டியம்' என்னும் பத்திரிகையை நடாத்தி வந்த க. வேலுப்பிள்ளை அவர்களின் அச்சகத்தில் தொழில் பயின்றார். 1910-ல் களுத்துறையில் ஒரு வியாபார ஸ்தாபனத்தில

(5-ம் பக்கம் பார்க்க)

### ஐயாறன் எழுதுவது

தமிழர், இந்தியர் இவர்களால்தான் தமது கட்சிக்குத் தோல்வி ஏற்பட்டதாக ஸ்ரீமா ஒரு கூட்டத்தில் பேசினாராம். கொழும்பிலிருந்து அத்தனகலைபோகும் வரை, ஒரே வகுப்புத் துவேஷங்கள் எழுப்பப்பட்டனவாம்.

தம் தோல்விக்குப் பிறர்மீது குற்றம் சுமத்துவது சுலபம். ஆனால் அதற்கு நாமேதான் காரணம் என்பதை அறிந்து அத் தவறுகளைத் திருத்திக் கொள்வதுதான் அறிவுடைமை.

* * *

இங்கு நடந்த தேர்தலில் கூட்டு அரசாங்கத்தைச் சேர்ந்த இடதுசாரிகளுக்கு பல தமிழர்களின் ஆதரவு கிடைத்திருக்கிறது. மலைநாட்டிலே தமிழர்களும் அவரது காங்கிரஸும் கூட்டுஅரசாங்கத்தைப் பகிரங்கமாக ஆதரித்துவேலைசெய்தனர். அப்படி இருக்கும் தமது தோல்விக்குத் தமிழரும், இந்தியரும்தான் காரணம் என்றால், அவர்களுக்கும் ஸ்ரீமா கட்சியை ஆதரித்த மற்ற தமிழருக்கும் எப்படி இருக்கும்! தமது ஆதரவாளரையே இப்படிப் புண்படுத்துவது ஸ்ரீமா போன்ற பொறுப்புள்ள தலைவர்களுக்கு அழகாகுமா? அவரது பேச்சு வகுப்புத் துவேஷத்தை மீண்டும் கிளப்பிவிடாதா?

* * *

அது ஒருபுறமிருக்க தமிழர் உள்ளிட்டு யாருக்கும் தங்களிஷ்டப்படி வாக்களிக்க பூரண உரிமை உண்டல்லவா? ஐந்துவருடகால அவகாசமிருந்தும், ஏன் தமிழரின் பிரதிநிதிகளை அழைத்து தேசியமுறையில் அவற்றைத் தீர்த்திருக்கப்படாது? அப்படித் தீர்த்திருந்தால் அவர்களது பூரண ஆதரவும் கிடைத்திராதா? ஏன் வடமாகாணத்தில் தமது கட்சியின் சார்பாக ஒரு அபேட்சகரையும் நிறுத்தத் துணியவில்லை? ஏன் அவர் இப்பகுதிப் பக்கம் தலைகாட்டக்கூட முடியவில்லை?

உலகத்திலேயே ஓரேஒரு பெண் பிரதமரெனப் புகழ் பெற்றவர், தாய்க்குலத்தின் பெருமையை முன்னிட்டாவது இதையெல்லாம்பற்றி சற்றே சிந்தனைசெய்து, இனியும் வகுப்புவெறிகளுக்குத் தூபம்போடாமல், தமிழரின் பூரண அன்பையும்ஆதரவையும் இனிமேலாவது பெறவேண்டுமென்ற நோக்கத்துடனேயே இதை எழுதலானேன்.

வகுப்பு வெறியால் இலங்கை அடைந்த கஷ்டநஷ்டங்கள் போதும் போதும். மக்கள் அளித்துள்ள இத்தீர்ப்பை மகிழ்ச்சியுடன் ஏற்று தங்கள் பழைய தவறுகளைத் திருத்திக்கொண்டு, மற்றக் கட்சிப் பிரதிநிதிகளும் தம்மைப்போல் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களே என்பதை மறவாமல், அவர்களுடன் நாட்டு நன்மைக்காக கூடுமான ஒத்துழைப்பு அளிப்பதே தேசாபிமானமான செயலாகும். எக்காரணம்பற்றியும் வகுப்புத் துவேஷத்துக்கும் வெறிக்கும் தூபம்போடக்கூடாது. இதை உணர்ந்து. இனிமேலாவது அவர் இப்படிப் பேசாமல் இருப்பாரா?

* * *

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் சென்ற செவ்வாயன்று இராவணேசனைக்காண ஏராளமான கூட்டம். அவனது ஆட்டம், பாட்டு, கம்பீரம், வீரம் எல்லாம் கண்டதும், அவனைப் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் போல் தோன்றியது. நல்லவேளை சீதை வரவில்லை. அவளைப் பார்த்திருந்தால் இராவணன் மீது நம் மதிப்புக் குறைந்திருக்கும்.

பேராதனைப் பல்கலைக்கழ

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உறுதி கூறிய கட்சிக்கு ஆதரவைக் கொடுத்தோம்'

## வரவேற்புக் கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி.

கிளிநொச்சி, வியாழன்

"வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் தங்களுக்கு உரிமை வேண்டுமே தவிர பட்டம் பதவி தேவையில்லையென்பதைச் சென்ற பொதுத்தேர்தலில் பகிரங்கமாக எடுத்துக் காட்டியுள்ளனர். நாம் கொழும்பு சென்ற போது எம்மை இரு முக்கிய கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கியதேசியக்கட்சியும் வரவேற்றனர். காரணம் எமது கட்சியின் ஆதரவுடன் ஒரு அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு. எமது கொள்கைகளை ஏற்று உங்களுக்கு விமோசனம் அளிப்போம் என்று உறுதி கூறிய கட்சியான ஐக்கியதேசியக் கட்சிக்கு எமது ஆதரவை கொடுத்தோம். இவ்வாறு ஜெயந்திநகர் மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர்.

இக்கூட்டம் கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டது. அத்துடன் கிராமச்சபைக்கு 12-வட்டார அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்ட வ. த. அழகரத்தினத்துக்கும் வரவேற்பு அளித்தனர்.

கூட்டத்திற்கு வவ. இ. தம்பிப்பிள்ளை தலைமை வகித்தார் திருவாளர்கள் த. நல்லதம்பி ஆ. எற்வேட், கே. ஸ்ரீகாந்தரூபன், வ. த. அழகரத்தினம் ஆகியோரும் பேசினர்கள்.

## சபையிலிருந்து ராஜினமா

கொழும்பு, வியாழன்

இலங்கை தெங்குப்பொருள் சபை அதிகாரிகளில் ஒருவரான திரு. எச். டொன் டேவிட் தமது ராஜினமா கடிதத்தை வர்த்தக மந்திரி டாக்டர் எம். பி. டி. பீரிஸிடம் சமர்ப்பித்துள்ளார். மற்றும் சில அதிகாரிகளும் ராஜினமாச் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

REGAL — JAFFNA
NOW SHOWING
VINCENT PRICE
IN
TOWER OF LONDON

கெப்பிட்டல்
(கொட்டாஞ்சேனை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பானுமதி — பத்மினி
(மற்றும் பலர் நடித்த)
ராஜா
தேசிங்கு

## இலங்கை-இந்தியர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த புதன்கிழமை இரவு இலங்கை—இந்தியர் சங்கத்தின் கூட்டம் நடைபெற்றபொழுது பின்வருவோர் புது வருடநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

புதிய நிர்வாகிகள்:

தலைவர்: கே. வெங்கடசாமி, உப-தலைவர்: ஆ. சங்கரன், காரியதரிசி: சி. துரைப்பாண்டியன், உபகாரியதரிசி: க. மாணிக்கம், பொருளாளர்கள்: ஆர். நாராயணசாமி, ஜி. அண்ணாமலை,

கமிட்டி அங்கத்தினர்கள்: ஏ. வெங்கடசாமி, பி. தேவராஜன், எம். சங்கரன்செட்டியார். ஆர். இராமசாமி, என் அய்யோத்தி, ஆ. பெருமாள் வி. இராமச்சந்திரன், கே. கோபால், எஸ் எம். ஒன் மான், எஸ். கருப்பசாமி, வி வேலுச்சாமி.

## சேர்லி வருகிறார்

கொழும்பு, வியாழன்

புதுடில்லியிலுள்ள இலங்கை ஹை கமிஷனர் திரு. சேர்லி அமரசிங்கா அடுத்த வாரம் இலங்கைக்கு வரவிருக்கிறார்

லீவில் வரும் அவர், மந்திரிகளையும் பாராளுமன்றக் காரியதரிசிகளையும் சந்திப்பார்.

## லட்சார்ச்சனை

ஊர்காவற்றுறை, வியா,

ஊர்காவற்றுறை — புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலயத்தில் அடுத்தமாதம் 6-ந் திகதி தொடக்கம் 9-ந் திகதிவரையும் இலட்சார்ச்சனை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பூர்த்தியாகும் தினத்தன்று மகா சங்காபிஷேகமும், முளிர்தியும் அன்றிரவு அம்பாள் வீதிவலம் வரும் காட்சியும் நடைபெறும். மூன்று காட்சிகளிலும் வேதம், திருமுறை ஓதல் என்பனவும் நடைபெறும்.

## "சுயமுயற்சி விமோசனம் தரும்"

சுழிபுரம், வியாழன்

"சுயமுயற்சியால் முன்னேறுவதால் மட்டுமே விமோசனத்தைக் காண முடியும். கிராமத்தவர் தமது தேவைகள் எல்லாவற்றையும் தமது முயற்சியால் உருவாக்கிக் கொள்வார்களானால் அதுவே பிறருடைய உதவி இல்லாமல் எம்மால் வாழ முடியும் என்பதைக் காட்டும்" என்று காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மாதகல் பகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்க புதிய கட்டடத் திறப்புவிழாவின்போது கூட்டுறவுக் கொடியை ஏற்றி வைத்து பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கூட்டுறவுதான் எமது நாட்டின் உயர்வாகும். கூட்டுறவு உத்தியோகத்தர்களின் உதவியுடன் எமக்கு வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கிராமத்தவரின் சேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தியாக்க இச்சங்கம் பணியாற்ற வேண்டும்.

யாழ். மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எஸ். பொன்னுத்துரை புதிய கட்டிடத்தைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பித்து வைத்தார். பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

## ஆலயபரிபாலன சபைக் கூட்டம்

ஊர்காவற்றுறை, வியாழன்

புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவில் என வழங்கும் ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தக் கூட்டம் ஆலய மண்டபத்தில் திரு. எம். கதிர்காமர் தலைமையில் சென்ற சனிக்கிழமை இரவு நடைபெற்றது. ஆசிரியர் திரு. கே. தாமோதரம்பிள்ளை உரை நிகழ்த்துகையில் ஆலய பரிபாலனசபையின் திறமையான நிர்வாகத்தின் மூலமே ஆலய வளர்ச்சியடைந்துள்ளது எனவும் ஊக்கமாக உழைக்கக்கூடிய தொண்டர்களையே நிர்வாகசபையில் அமர்த்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார், ஆலய வருடாந்த உற்சவத்தை அடுத்த மாதம் 7-ம் திகதி ஆரம்பித்து நடத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

பின்வருபவர்கள் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு. அ. குமாணிக்கவாசகர், திரு என். செல்லத்துரை, திரு க. கருணாகரன், திரு சி. கு. செல்லையா திரு மு. விஞசித்தம்பி

தலைவர்- திரு. எஸ். சின்னத்துரை. உபதலைவர்- திரு கே, சபாபதிப்பிள்ளை, திரு எம். கதிர்காமர், காரியதரிசிகள்-: திரு. சே, தாமோதரம்பிள்ளை, திரு. எஸ். நாகலிங்கம், தனாதிகாரி- திரு கே. ஐயம்பிள்ளை நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது

## நியமனம்

கொல்லாக்கை, வியாழன்

கொல்லாக்கை மருத்துவமனைக்கும் வெள்ளவாய மருத்துவ மனைக்கும் உத்தியோகபற்றற்ற பார்வையாளராக மீரியபத்தை தோட்ட மனேஜர் திரு. ஆர். எம். ஹிபல நியமனம் பெற்றுள்ளார்.

## இடமாற்றம்

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி கச்சேரியில் விகிதாசார [illegible] காரியாதிகாரி கச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# 'தனிப்பட்ட சலுகைகளுக்கு ஜனநாயகத்தில் இடமில்லை'

## வரவேற்புக்கூட்டத்தில் பிரதமர்

கொழும்பு, வியாழன்

ஜனநாயகத்தில் தனிப்பட்ட சலுகைகளுக்கு இடமில்லை. ஜனநாயக அரசாங்கம் மக்களின் பணத்தை உபயோகமான முறையில் செலவு செய்யவேண்டுமேயொழிய, தனிப்பட்டவரின் சொந்தப் பணமாக கருதக்கூடாது என்று கண்டியில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டமொன்றில் பிரதமர் டட்லி சேனநாயக்க பேசும்போது கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

கடந்த காலத்தில் பொதுப் பணம் தவறான வழியில்செலவு செய்யப்பட்டதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கடந்த காலத்தில் சொந்தக்காரர்களின் தனிப்பட்ட நலத்திற்காகப் பொதுப்பணம் செலவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் கடந்த தனிப்பட்ட சலுகைகளும், பழிவாங்கல் முயற்சிகளும் விரைவில் அம்பலத்திற்கு வரும்.

கொழும்பிற்கும் கண்டிக்குமிடையில் சுமார் 60 வரவேற்புக்கூட்டங்கள் நடைபெற்றன.

### மோசடி நிறைந்த தேர்தல்

அண்மையில் நடைபெற்ற தேர்தல் இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களிலும் மிகவும் மோசடி நிறைந்ததாகும். இந்த நிலையிலும் ஜனநாயக சக்திகள் வெற்றிபெற்றுள்ளன என்று பட்டிகமதொகுதியில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பிரதமர் பேசும் போது கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:—

கடந்த காலத்தில் நான் பல தேர்தல்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒரு தேர்தலிலாவது இம்முறை நடந்தது போல மக்கள் பயமுறுத்தப்படவில்லை. நீதியற்ற மோசடிகள் பற்றி மக்கள் விரைவில் அறிவார்கள்.

### மக்களின் துன்பம்

கேகாலையில் நடைபெற்ற மற்றொரு வரவேற்புக் கூட்டத்தில் பிரதமர் பேசும்போது கூறியதாவது:-

ஜனநாயக அரசாங்கத்தை இந்நாட்ட மக்கள் அதிகம் துன்பம் அடைந்து விட்டனர். மிகவும் நெருக்கடியான நிலையில் தான் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. ஜனநாயக சக்திகளுக்கும், ஜனநாயகத்திற்கும் மாறான சக்திகளுக்குமிடையே இத்தேர்தல் நடைபெற்றுள்ளது ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவை பணயமாக வைக்கப்பட்டே தேர்தல் நடைபெற்றுள்ளது.

### பொருளாதார அபிவிருத்தி

நாட்டின் சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் ஏற்பட்டுள்ள பயங்கர நிலைமை இன்னும் தணிந்துவிடவில்லை. இந்நிலையில் நாம் தேசிய நன்மையைக் கருதி செயலாற்ற வேண்டும். இதற்காகவே ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளோம் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய அதே நேரத்தில், ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகளிடமிருந்தும் நாட்டை பாதுகாக்க வேண்டும்.

### ஜனநாயக சக்திகள்

கடந்த காலத்தில் ஏற்பட்ட வேற்றுமைகளை மறந்து நாட்டிலுள்ள எல்லா ஜனநாயக சக்திகளும் ஒன்றுசேர்ந்துவிட்டன. இந்நாட்டில் ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகள் நாங்கள் ஒரு சமுகத்தின் உரிமைகளை விற்றுவிட்டதாக பிரசாரம் செய்து வருகிறார்கள். யார் உரிமைகளை விற்றதென்பதை விரைவில் அவர்கள் பாராளுமன்றத்தில் அறிந்துகொள்வார்கள்.

### மக்களின் தீர்ப்பு

எங்களை ஆதரித்தவர்களுக்கு மட்டுமல்ல, எதிர்த்தவர்களுக்கும் நான் கூறவேண்டியது இதுதான்: மக்கள் அளித்த தீர்ப்பின்படியே இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டது. இந்த முடிவை ஜனநாயக முறைப்படி மக்களினால்தான் மாற்றியமைக்க முடியும். நான் ஒரு சமூக மக்களுக்கு துரோகம்செய்துவிட்டதாக சிலர் கூறிவருகிறார்கள் இவ்விஷயம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டபின் யார் துரோகம் செய்தது என்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள். எனது அரசியல் சரித்திரத்தை மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள், ஆதலால் நான் துரோகம் செய்யமாட்டேன் என்பது மக்களுக்கு தெரியும்.

### நிறைசேரி [காலி

நிறைசேரி காலியான நிலையில்தான் இருக்கின்றது. நாட்டின் நிதி நிலைமையை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு உங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் தேவை. நாட்டின் முன்னேற்றத்திற்காக பல திட்டங்களை ஆரம்பிப்பதற்கு மக்களின் நல்லாதரவு தேவை.

### கார்களை விற்கமுடிவு

கூட்டரசாங்க அமைச்சர்களால் பாவிக்கப்பட்ட விலை உயர்ந்த 'பென்ஸ்' கார்களை விற்று, அப்பணத்தை பொதுநல சேவைக்கு பயன்படுத்த தேசிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மக்களின் பணத்தை கூட்டரசாங்கம் தவறான வழியில் செலவுசெய்ததை, விலையுயர்ந்த 'பென்ஸ்' கார்களும், மந்திரிகளுக்காக மாடி வீடுகளும் எடுத்துக்காட்டும். கடந்த காலத்தில் பல மோசடிகளையும் சொந்தக்காரர்களுக்கு தனிப்பட்ட சலுகைகள் செய்தவர்களையும் விரைவில் அம்பலப்படுத்த தவறமாட்டோம்.

## மேற்கிந்தீஸ் 1 விக்: 125 ரன்கள்

போர்ட் ஆப்ஸ்பெயின், ஏப் 1

ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையே இங்கு நடைபெற்று வரும் 2-வது கிரிக்கெட் டெஸ்டில் மேற்கிந்தீஸ்தன் 2-ம் இன்னிங்ஸில் 1 விக்கெட் நஷ்டத்திற்கு 125 ரன்கள் எடுத்தது. நேற்று ஆட்டத்தின் 5-ம் நாள். முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 516 ரன்களும், மேற்கிந்தீஸ 429 ரன்களும் எடுத்திருக்கின்றன.

## அப்துல்லா

புதுடில்லி, ஏப். 1

ஷேக் அப்துல்லாவுக்கு சிறுநீரக வருமாறு பி. இன் விசேஷ அழைப்பு வழக்கத்திற்கு விரோதமானது. கண்டிக்கக்கூடியது என பிரதமர் சாஸ்திரி கூறினர்.

நேற்று அல்ஜியர்ஸில் நடைபெற்ற சூ—ஷேக் சந்திப்பின் பேரது வாக்கெடுப்பு முன்னணித் தலைவர் மிர்ஸா அப்துல்பெய்க்கும், அல்ஜியாவிலுள்ள சீனத் தூதரும் உடனிருந்தனர்.

## வாக்கர் விஜயம்

லண்டன், மார்ச் 31

பிரிட்டிஷ் தொழிற்கட்சி அங்கத்தினர் திரு. கோர்டன் வாக்கர், ஹனோய், பீகிங், வாஷிங்டன் ஆகிய நகரங்களுக்கு விஜயம் செய்வியட்நாம் தீர்வு பற்றி முயற்சி மேற்கொள்வார் என அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென் வியட்நாமிலிருந்து வெளியேறுக!"

## அமெரிக்காவுக்கு சீனப்பிரதமர் சூ-என்-லாய் எச்சரிக்கை

### யுத்தத்தை விஸ்தரித்தால் தோல்வியே கிடைக்குமாம்

சைகோன், ஏப்ரல் 1

**அமெரிக்க, தென்வியட்நாமிய விமானங்கள் நேற்று வடவியட்நாமில் தாக்கியதில் 4 ரடார் நிலையங்கள் சேதமடைந்தன. இத்தாக்குதலில் 47 விமானங்கள் கலந்து கொண்டன.**

**இவற்றில் 12 விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாய் வடவியட்நாம் கூறுகிறது. ஆனால் ஒன்றை மட்டுமே இழந்ததாக அமெரிக்கர்கள் கூறுகின்றனர்.**

அதேசமயம் தென்வியட்நாமிலுள்ள வியட்காங் இலக்குகள்மீது நூற்றுக்கதிகமான அமெரிக்க தென்வியட்நாம் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

**3 ஹெலிகோப்டர்கள் சுடப்பட்டன**

தென்வியட்நாம் துருப்புகளை ஏற்றிச் சென்ற 3 அமெரிக்க ஹெலிகோப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது. இதன் விளைவாக இரு அமெரிக்கரும் பல தென்வியட்நாமியரும் மாண்டதாக மேலும் அறிவிக்கப்பட்டது.

**சீனர்கள் சுட்டனர்**

தென்சீனமீது பறந்த ஒரு அமெரிக்க வேவு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாயும் கூறப்பட்டது.

தென்வியட்நாமிலுள்ள அமெரிக்கத்தூதர் ஜெனரல் டெய்லர் நேற்று வாஷிங்டனில் ஜனாதிபதி ஜோன்ஸனைச் சந்தித்துப் பேசினார். தாம் ராஜினாமாச் செய்வதாகக் கூறப்பட்டதற்கு அர்த்தமே கிடையாது என அவர் கூறினார்.

தென்வியட்நாமில் அமெரிக்க நடவடிக்கை குறித்து பாதுகாப்பு, ராஜாங்க இலாகாக்கள் பல யோசனைகளை அறிவிக்கும் என்றும் டெய்லர் கூறினார்.

அமெரிக்க விமானத் தாக்குதல்கள் தென்வியட்நாம் மக்களின் மனோபலத்தை அதிகரித்திருப்பதாயும் அவர் கூறினார்.

**சூ எச்சரிக்கை**

நேற்று அல்ஜீரியாவில் சீனப்பிரதமர் திரு. சூ நிருபர்களுக்களித்த பேட்டியில் தென்வியட்நாமிலிருந்து அமெரிக்கர் வெளியேற வேண்டும் என வற்புறுத்தினார். அமெரிக்கா யுத்தத்தை விஸ்தரிக்குமானால் சண்டையில் அது நிச்சயம் தோல்வியடையும் என்றும் அவர் கூறினார்.

நேற்றைய கடும் தாக்குதல் குறித்து வடவியட்நாம் சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனுக்குப் புகார் கூறியிருக்கிறது. அமெரிக்க ஜெட்விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதால் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாயும் கூறப்பட்டது.

## தியாகச்செயலின்மீது சேற்றை எறிவதா?

### சென்னை சட்டசபையில் கேள்வி

சென்னை, ஏப்ரல் 1

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது தற்கொலை செய்த 7 பேர்களை தீக்குளிப்பு செய்தார்கள் என்பதைவிட உயிர்த்தியாகம் செய்தார்கள் என்பதே பொருத்தமானதாய் இருக்கும் என முதன்மந்திரி பக்தவத்சலம் சட்டசபை சபாநாயகரிடம் ஒரு கட்டத்தில் கூறினார்.

"மொழிப் பிரச்னையில் அரசாங்கத்தின் பிடிவாதப் போக்குத்தான் இந்த உயிர்த்தியாகங்களுக்குக் காரணம் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா? இனி இம்மாதிரி நடக்காமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?" என்று ஒரு அங்கத்தினர் கேட்டார்.

ஏற்கனவே சொன்னதைத் தவிர வேறொன்றும் எதுவும் சொல்வதற்கில்லை என முதல் மந்திரி பதிலளித்தார்.

கேள்வி: தியாகச் செயலின் மீது சேற்றை எறிவதா? இது தமிழ்ப் பண்புக்கு அழகா?

பதில்: ஒவ்வொருவருக்கும் ஒரு பண்பு இருக்கிறது.

கேள்வி: இப்படி உயிர்த்தியாகம் செய்தவர்களின் குடும்பத்தினரை எந்த மந்திரியாவது பார்த்தாரா?

பதில்: எனக்குத் தகவலில்லை.

கேள்வி: இப்படி உயிர்த்தியாகம் செய்தவர்கள் விட்டுச் சென்றிருக்கும் கடிதங்களை அரசாங்கம் பார்த்ததா?

பதில்: அரசாங்கத்துக்குச் சில தகவல்கள் கிடைத்தன. அதற்குமேல் நான் எதுவும் சொல்லுவதற்கில்லை.

மற்றொர் கேள்விக்கு முதன் மந்திரி பதிலளிக்கையில் ஆந்திரா, மத்தியபிரதேசம், கேரளம், மகாராஷ்டிரம், மைசூர் ஆகிய ராஜ்யங்களிலிருந்தும் நிசர்விலிருந்தும் ஆயுதம் தாங்கிய போலிஸ்படைகள் தருவிக்கப்பட்டதாகக் கூறினார்.

கேள்வி: கிளர்ச்சிக் காலத்தில் சுழல் துப்பாக்கிகள் (டெஷின்கன்) உபயோகிக்கப்பட்டது என்பது உண்மையா?

பதில்: இல்லை.

கேள்வி: நிலைமையைப் போலிஸ் சமாளிக்க முடியாததனால் ராணுவத்தின் உதவியை நாடவேண்டும் என போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கேட்டுக் கொண்டாரா?

பதில்: அப்படி ஒன்றும் இல்லை.

கேள்வி: ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது போலீஸ் சுடலில் எவ்வளவு பேர் இறந்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க உத்தியோகப் பற்றற்றவர்கள் கொண்ட கமிட்டியொன்று நியமிக்கப்படுமா?

பதில்: அத்தகைய உத்தேசம் எதுவுமில்லை.

### விமானவிபத்தில் 49 பேர் பலி

டாஞ்சியர்ஸ், ஏப்ரல் 1

நேற்று ஸ்பெயின் பிரயாணிகள் விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதால் 49 பிரயாணிகள் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

### குளிக்கரை சக்கரவர்த்தி

புதுடில்லி, ஏப்ரல் 1

நேற்று ஆரம்பமான கவிஞரும் இசைவல்லுனருமான புரந்தரதாஸரின் 481வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் பிரதமர் சாஸ்திரி கலந்து கொண்டார். இவ்வைபவத்தில் தமிழ்நாட்டு நாதஸ்வர வித்துவான் குளிக்கரை பிச்சையப்பாபிள்ளைக்கு "நாதஸ்வரச் சக்கரவர்த்தி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

### "அன்புத்தம்பி" எனலாமா?

சென்னை, ஏப். 1

கடந்த வெள்ளிக்கிழமை கார்ப்பரேஷன் கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் திரு. ஜி. உமாபதி, மேயரை "அன்புத்தம்பி" என்று அழைத்ததன் மூலம் அவரை அவமதித்துவிட்டதாய் தி. மு. க. தலைவர் திரு. வி. முனுசாமி ஆட்சேபித்தார்.

"மேயர் வயதில் சிறியவராய் இருக்கலாம். அவரை உமாபதிக்கு நன்கு தெரிந்திருக்கக் கூடும். மேயரின் காரியாலயத்தில் அவரை உமாபதி "அன்புத்தம்பி" என்று அழைக்கலாம். ஆனால் முனிசிபல் கார்ப்பரேஷன் கூட்டத்தில் அவ்வாறு செய்திருக்கக் கூடாது என்றும்" திரு. முனுசாமி கூறினார். அவர் பேசியபோது திரு. உமாபதி சபையில் இல்லை.

பிரிட்டனில்

### வெள்ளையரல்லாதார் 10 லட்சம் பேர்

லண்டன், ஏப்ரல் 1

பிரிட்டன் இப்போது பல இனங்கள் வாழும் ஒரு நாடாகி விட்டது என உள்நாட்டு மந்திரி சர்பிராங்க் சொஸ்கிஸ் காமன்ஸ் சபையில் கூறினார்.

"தற்போது பிரிட்டனில் 8 லட்சம் முதல் 10 லட்சம் வரையான குடியேற்ற நிற மக்கள் வசிக்கிறார்கள். எனவே நாம் நாகரிகமுள்ள மக்களாக நடந்துகொண்டு, குடியேற்ற மக்களுடன் சந்தோஷமாக ஒன்றுபட்டு ஒழுங்கும் மேலும் சகிப்பும் நிறைந்த சமூகத்தை உருவாக்கவேண்டும்" என அவர் கூறினார்.

### சூ கெய்ரோ வருவார்

கெய்ரோ, ஏப்ரல் 1

சீனப் பிரதமர் சூ-என்-லாய் [illegible] ஜனாதிபதி நாஸருடன் பேச்சு நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### மவுண்ட் பேட்டனுக்கு பாகிஸ்தான் கதவடைப்பு

கராச்சி, ஏப்ரல் 1

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யும் திட்டத்தை மவுண்ட் பேட்டன் பிரபு கைவிட நேர்ந்தது. அவரது விஜயத்தை தான் விரும்பவில்லை என பாகிஸ்தான் தெரிவித்திருந்ததே இதற்குக் காரணம்.

இந்தியாவின் கவர்னர்ஜெனரலாகவிருந்த போது தங்கள் நாட்டிடம் அவர் அநியாயமாக நடந்துகொண்டார் என பாகிஸ்தானியர் இன்னும் ஆத்திரம் கொண்டிருப்பதால் மவுண்ட் பேட்டன் விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பஞ்சாப் பிரிவினை, காஷ்மீர் பிரச்னை ஆகியவற்றில் மவுண்ட் பேட்டனின் துரோகத்தை பாகிஸ்தானியர் மறந்து மன்னித்துவிட்டார்கள் என பிரிட்டன் கருதியிருக்கக் கூடும் என டான் பத்திரிகை கூறுகிறது.

### காஷ்மீரில் 249 பேர் கைது

புதுடில்லி, ஏப்ரல் 1

ஜம்மு காஷ்மீரில் சென்ற மாதம் 249 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும், இவர்களில் 228 பேர் வாக்கெடுப்பு முன்னணித் தலைவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. இவர்களில் 4 தலைவர்கள் தரங்கார் காவலில் வைக்கப்பட்டது குறித்து ஹைகோர்ட்டுக்கு முறைப்பாடு செய்து கொண்டிருக்கிறார்.

### தி. மு. க. அங்கத்தினர் கைது

கோயமுத்தூர், ஏப்ரல் 1

கோயமுத்தூர் நகரசபையில் திராவிட முன்னேற்றக் கழக கோஷ்டித் தலைவரான திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் கைதுசெய்யப்பட்டார். சமீபத்தில் நடந்த ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையொட்டி சட்டவிரோதமாகக் கூடியது, தீ யிடல் ஆகிய பிரிவுகளின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டார்.

### வெள்ளைக்கொடி நாட்டினர்

புதுடில்லி, ஏப்ரல் 1

நேற்று மாலை 5 மணி முதல் கூச்பிகார் எல்லையில் பாகிஸ்தான் துருப்புக்கள் சுடுவதை நிறுத்திக்கொண்டுவிட்டன. இதற்கடையாளமாக அவர்கள் வெள்ளைக்கொடியை அப்பகுதியில் நாட்டியிருந்தனர். மேற்கு வங்க கிழக்கு பாகிஸ்தான் பிரதம காரியதரிசிகள் வருகிற 9-ம் திகதி மீண்டும் சந்தித்துப் பேசவிருக்கிறார்கள்.

ஆரணியில்

### ஆடு திருடிய கள்ளன்

ஆரணி, ஏப்ரல் 1

ஆரணிக்கு அடுத்த சாட்பேட்டை கிராமத்தில் வசிக்கும் மாசிலாமணி என்பவருக்குச் சொந்தமான ஆட்டை இரவில், பர்ஷா என்பவர் திருடிக்கொண்டு ஓடியசமயம், ஆடு கத்தியதால் அக்கம்பக்கத்தார் ஓடிவந்து அவரைப்பிடித்தனர்.

### காஞ சமரசம் செய்யுமாம்

ஆக்ரா, ஏப்ரல் 1

மலேஷிய தகராறில் சமரசம் செய்துவைக்க கானா முன்வந்திருக்கிறது. கானா அதிபர் நிக்ருமா பிரதமர் துங்கு ரஹ்மானுக்கு இதுபற்றித் தெரிவித்திருக்கிறார்.

### 32-வது ஆண்டு

புதுடில்லி, ஏப்ரல் 1

இந்திய விமானப்படையின் 32-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன், பிரதமர் சாஸ்திரி பாதுகாப்பு மந்திரி சாவன் ஆகியோர் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள்.

### ரூ. 2 கோடி அகப்பட்டது

கல்கத்தா, ஏப்ரல் 1

கணக்கில் வராத பணம் ரூ. 2 கோடிவரை மேற்கு வங்காள வருமானவரி இலாகாவிடம் டலர் தாமாக முன்வந்து அறிவித்துள்ளனர்.

### திரிபுராவில் மூவர் கைது

திரிபுரா, ஏப். 1

திரிபுராவில் நேற்று 3 கம்யூனிஸ்டுகள் தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர்.

### லாவோஸில் மூவருக்கு தூக்கு

வியான்டியன், ஏப். 1

லாவோஸில் 3 ராணுவ அதிகாரிகள் தூக்கிலிடப்பட்டனர். வலதுசாரி கிளர்ச்சிக்கு இவர்கள் காரணமாய் இருந்ததாகக் கூறப்படுகிறது.

### ஆசிரியர் மந்திரியானார்

கராச்சி, ஏப். 1

கராச்சியிலிருந்து வெளிவரும் "டான்" பத்திரிகையின் ஆசிரியர் அப்துல் ஹூஸெய்ன் பாகிஸ்தான் மத்தியமந்திரிசபையில் ஒரு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### "ஜோதி"யுடன்சென்ற ஜீப்புக்கு விபத்து

பம்பாய், ஏப். 1

"ஜவஹர் ஜோதி"யுடன் சென்ற ஜீப் ஒரு லொறியுடன் மோதியதால் 4 பேருக்குக் காயம் ஏற்பட்டது. இருவர் நிலைமை மோசமாக உள்ளது.

### 3 நாடுகளில் மந்திரிசபை மாற்றம்

ஜாகர்த்தா, ஏப். 1

இந்தோனேஷிய மந்திரிசபையில் மேலும் 4 புதிய மந்திரிகளை ஜனாதிபதி சுகர்னோ புகுத்தியிருக்கிறார். இப்போது அங்கு மொத்தம் 75 மந்திரிகள் இருக்கிறார்கள்.

அதேபோல் நைஜீரியப் பிரதமர் அபூபக்கர்தபாவா பலேவா தமது மந்திரிசபையை மாற்றியமைத்திருக்கிறார். அங்கு மந்திரிகள் 54 பேர்.

சூடானில் 3 இடதுசாரிகளும், ஒரு கம்யூனிஸ்டும் மந்திரிசபையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கலப்பு கட்சி அரசாங்கம் அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

### அண்ணா - கருணாநிதி சந்திப்பு

பாளையங்கோட்டை, ஏப். 1

பாளையங்கோட்டை இளம் குற்றவாளிகள் ஜெயிலில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சட்டசபை எதிர்க்கட்சி உபதலைவர் திரு. மு. கருணாநிதியை தி. மு. க. தலைவர் திரு. ஸி. என். அண்ணாதுரை சந்தித்து ஒரு மணி நேரம் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 2-4-65

கொழும்பு

(செய்திகள்: காலை 7 00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 பக்திப் பாடல்கள், 7-30 தோத்திரப் பாடல்கள் — பாடுபவர் யோகா சுப்பிரமணியம், 8-00 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஆர். சுந்தரமூர்த்தி — நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்திய இசை 7-00 வி. எஸ். எம். மணி பாகவதர் — கதாப்பிரசங்கம். 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு — நாடும் நமும். 9-30 நேயர்விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

---

## கொந்தருத்து பற்றி விசாரணை

கொழும்பு, வியாழன்

பாடசாலைக் கட்டிடங்களின் கொந்தருத்து பற்றி விசாரணை செய்யுமாறு, கொழும்பு வடக்கு கல்வி இலாகாவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கல்விமந்திரி திரு ஐ. எம் ஆர். ஏ. இரியகொல்லையை கேட்டுள்ளனர். ரூபா 980,000 செலவில் கட்டப்பட்டுள்ள 45 பாடசாலை கட்டடங்களில் மோசடி நடந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆசிரியருக்குக் கடிதம்

# தமிழரசுத் தலைவருக்கு பகிரங்கக் கடிதம்

1956-ம் ஆண்டு முதல் 59-ம் ஆண்டுவரை எம். ஈ பி ஆட்சியிலும், 1960 முதல் 1965-ம் ஆண்டுவரை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியிலும் கடந்த 9 ஆண்டுகளாக இன்னல் அனுபவித்த தமிழரசின் நலன்களைப் பின்னணியில் வைத்து சிந்தித்தே இக்கடிதத்தை தங்களுக்கு வரைகிறேன்.

நீங்களும், உங்கள் கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிப்பதன்மூலம் ஒரு ஸ்திரமான, ஜனநாயக அரசாங்கத்தை அமைக்க உதவியதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் திரு டட்லியின் தேசிய அரசாங்கத்தில் நீங்களும், உங்கள் கட்சியும் மந்திரிபதவி ஏற்க விரும்பாதது பற்றி மிகவும் ஏமாற்றமடைகிறேன். இந்த அம்சத்தில் நீங்களும் உங்கள் கட்சியும் பாரதூரமான தவறு இழைக்கிறீர்கள் என்பதே என் தாழ்மையான அபிப்பிராயம். உங்கள் ஆதரவிற்கு பிரதிபலனாக எதுவாயிருந்த போதிலும் நீங்கள் மந்திரிபதவியை ஏற்க வேண்டுமென்பதே என் அபிப்பிராயம். இந்த தேசிய அரசாங்கம் உங்கள் பிரச்சினைகளை பூர்த்தி செய்யத் தவறினால் அப்போது நீங்களும் உங்கள் கட்சியும் ராஜினாமா செய்வதற்கு வாய்ப்பு உண்டு. திரு டட்லியின் தேசிய அரசாங்கத்தில் உங்கள் கட்சி பதவி ஏற்றால் அது தமிழ்மக்களின் இழந்த மனோபலத்தை மீண்டும் வளர்ப்பதாய் இருக்கும். இந்த அரசாங்கத்தில் தமிழர்கள் பற்றுக்குறையான பிரதிநிதித்துவம் வகித்தால் தமிழர்களின் நிலையை பலவீனப்படுத்தும்.

எனவே காலங்கடக்குமுன் உடனடியாக திரு டட்லியைச் சந்தித்து தமிழரசுக்கட்சியினருக்கு 3 மந்திரி பதவிகளும், 3 உதவி மந்திரி பதவிகளும் வழங்குமாறு கோரவேண்டும்.

திரு. டட்லி, திரு. பொன்னம்பலத்துக்கு ஒரு மந்திரி பதவி அளித்தால் அது இன்னும் மேலானது. இதுபற்றி தமிழரசுக்கட்சி கவலைப்படத் தேவையில்லை. தேசிய அரசாங்கத்தின் சகல அங்கத்தினர்களுடனும் ஒத்துழைத்து ஒரே கோஷ்டியாக சிங்கள நண்பர்களின் கூட்டுடன் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேலைசெய்ய வேண்டும்.

யு. என். பி. அரசாங்கம் கண்ணியமான சிங்களக் கனவான்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. திரு டட்லி சேனநாயகா, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா போன்றோர் சமயம் வரும்போது சிறந்த ராஜதந்திரத்துடன் செயல்பட்டு உங்கள் பிரச்சினையை கௌரவமாகவும், திருப்திகரமாகவும், தீர்க்க முயல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதன்பின் நாட்டுமக்கள் அனைவரும் நாட்டுமுன்னேற்றத்துக்காக ஒன்றாகக் கைகோர்த்துச் செல்ல முடியும்.

என். விஜயஇந்திரா,
பொதுக்காரியதரிசி
ஜனநாயகசோஷலிஸ்ட்கட்சி,
பம்பலப்பிட்டி.

---

## செந்தமிழ் . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மகேஜர் ஆகி, அதிலிருந்து 1914-ல் தமது சொந்தத்தில் ஒரு வியாபார ஸ்தாபனத்தை அங்கு ஆரம்பித்தார் 1918-ல் இவருக்கும் மாமனாரின் மகளாகிய மீனாட்சியம்மையாருக்கும் விவாகத்தின் பின் தனது வியாபாரத்தாபனத்தை நிறுத்தி பர்மா முதலிய பிறநாடுகளுக்குச் சென்றார். 1920ல் பர்மாவில் வெளிவந்த 'சுதேசமித்திரன்' எனும் பத்திரிகையில் உதவியாசிரியராகிப் பணிபுரிந்த இவருக்கு இந்திய தேசிய இயக்கத்தினரின் பற்றுண்டானது. சென்னையில் சிலகாலம் வசிக்க நேர்ந்தமையால் வி. வி. சங்கக்காரியதரிசி எஸ். இராசரத்தினம் அவர்களின் சகோதரன் திரு கதிரேசபிள்ளை அவர்களுடனே சேர்ந்து தத்திச் சுருக்கெழுத்துத்திரட்டு என்னும் சுருக்கெழுத்து நூற் புத்தகத்தை வெளியிட உதவிபுரிந்தார்.

இவ்வாறு தமிழும் சமூகசேவையுமே மூச்சாக வாழ்ந்த இப்பெரியார் 30-3-51-ல் அமரரானார்.

"அன்னையே போல் அருந்த மிழை ஆதரித்த
பொன்னையா விண்ணுலகம் போயினனே-மண்ணுலகில்
பாவலர் நாவலர் பத்திரிகை ஆசிரியர்
யாவருள் தேடியழ இன்று"

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை இவர் பற்றி கலங்கிப் பாடியிருக்கின்றார். ஆண்டுதோறும் நடைபெறும் இவரின் நினைவுதினம் இவரால் ஸ்தாபிக்கப்பட்ட சன்மார்க்க சபை மண்டபத்தில் 3-4-65ல் கொண்டாடப்பட இருக்கின்றது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்

---

## ஜெயலங்காபணஉதவி ஸ்தாபனம்

ஜெயலங்கா பணஉதவி ஸ்தாபனத்தின் பொதுக்கூட்டம் 31-3-65-ல் நடைபெற்று கீழ்க்காணும் அங்கத்தவர்கள் புதிய நிர்வாக சபையின் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்:-

தலைவர்: பெ. கணபதிப்பிள்ளை, கரவெட்டி; உபதலைவர்: க. பரமசாமி, வட்டுக்கோட்டை; பரிபாலன காரியதரிசி: யோ. ஆரோக்கியநாதர், யாழ்ப்பாணம்; உபகாரியதரிசி: க கமலநாதன், யாழ்ப்பாணம்; கணக்குப்பரிசோதகர்: வ. செல்லையா, வாணி வடக்கு.

### நிர்வாக சபை உத்தியோகஸ்தர்

1 செ. வடிவேலு, 2, க. வயிரவன், 3. வ. இராமலிங்கம், 4 த. சி, கந்தையா, 5. கு. நடராசா, 6. இ. அப்புத்துரை, 7. க. கந்தவனம், 8 ஜூ. மரியாம்பிள்ளை, 9. எஸ். கயிலையர், 10 க. இராமச்சந்திரன், 11 வ. க வல்லி, 12. கு. சதாசிவம் 13. செ. இராசநாயகம், 14 செ. பொன்னுச்சாமி.

யோ. ஆரோக்கியநாதர்
காரியதரிசி.

29/1, மேல்மாடி,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்,
31-3-1965. 101

---

## கேள்வி விளம்பரம்

### நயினாதீவு-புங்குடுதீவு ஆயச் சேவை

நயினாதீவு-புங்குடுதீவு ஆயச் சேவையின் தலைவர் அவர்களால் 1965-ம் ஆண்டு சித்திரை மாதம் 17-ந் திகதி சனிக்கிழமை மத்தியானம் 12-00 மணி வரையிலும் சேவைக்கு "சீல்" வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரத்தின் பொருட்டு ரூபா 50-00 கட்டி 14-4-65 புதன்கிழமை பிற்பகல் 2-00 மணி வரை புங்குடுதீவு, நயினாதீவு கிராமசபை அலுவலகங்களில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம், கேள்விப் பத்திரத்திற்குக் கட்டிய பணத்தில் ரூ. 5-00 திருப்பிக்கொடுபட மாட்டாது. விபரங்களை நயினாதீவு கிராம சபையிலும். புங்குடுதீவு கிராம சபையிலும் கரும நேரங்களில் அறிந்து கொள்ளலாம். கேள்விப் பத்திரம் நயினாதீவு கிராம சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் 'சீல்' வைத்த கேள்விப் பெட்டிக்குள் போடப்பட வேண்டும் தவறின் பதிவுத் தபால் மூலம் தலைவர், நயினாதீவு-புங்குடுதீவு ஆயச் சேவை, நயினாதீவு என்ற விலாசத்திற்கு குறித்த நேரத்திற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
கு வி தம்பித்துரை,
காரியதரிசி,
நயினாதீவு-புங்குடுதீவு
ஆயச் சேவை
31-3-65 புங்குடுதீவு
192

---

## ராணிமாளிகை விருந்து

கொழும்பு, வியாழன்

நேற்றிரவு ராணி மாளிகையில் நடைபெற்ற விருந்தில் பிரதமர் டட்லி சேனநாயக்காவும் மற்றும் மந்திரிகளும் கலந்துகொண்டனர்.

## உஷாராக இருக்க உத்தரவு

கொழும்பு, வியாழன்

சில தினங்களுக்கு உஷாராக இருக்கும்படி எல்லா பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு எஸ ஏ திஸநாயக்கா உத்தரவிட்டுள்ளார்

---

## மாணவர் தேர்ச்சி அறிக்கை

தவணைப் பரீட்சை மாணவர் தேர்ச்சி அறிக்கைப் பத்திரம்-தடித்த அட்டை 100க்கு ரூ 10. பாடசாலைப் பெயர் அச்சிட ரூ. 12-50 விதம் முற்பணம் அனுப்பி விண்ணப்பிக்குக. பார்சலில் அனுப்புவோம். கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1860

---

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள CY 3288 இலக்கமுடைய மொறிஸ் 8 கார் விற்பனைக்கு இருக்கிறது. கன்னியந்காட்டி ஜுன் பென்னின்ஸ்கலா மோட்டோர் கராச்சில் பார்வையிடலாம். 1

---

45 கலன் கொள்ளக்கூடிய புது எண்ணைத் தகரங்கள் 85 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மின்சார உபநிலையம், காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு அருகாமையில் இருக்கும் வார்க்கலை வேலைத்தளம் அல்லது வாக்கஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3

---

## வகுப்புகள்

பி. ஏ, ஜி. ஏ. கியூ, ஜி. சி. இ, உயர்தரம் கலை, விஞ்ஞானம்; ஜி சி இ சாதாரணம், கலை, விஞ்ஞானம், வர்த்தகம்; ஜி. சி. இ. முதல் வருடம்: விஞ்ஞானம்: ஆங்கிலம், தமிழ் குறுக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம்; சிங்களம்; விசேஷமாலை வகுப்புகள்.- ஆங்கிலம், அட்சரகேத்திரகணிதம், பௌதீகம், இரசாயனம், உயிரியல், தமிழ் சரித்திரம், பூமிசாஸ்திரம், அரசியல் முதலிய வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யுனைட்டெட் இன்ஸ்டியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1887

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

த் தமிழ்ச் சங்கத்தார், பழைய நாட்டுக்கூத்து முறைக்கு புதிய மெருகு கொடுத்து ஒன்றரை மணி நேரத்துக்குள் அரிய கலை விருந்தை அளித்தனர், சிறப்பாக தமிழ் மாணவிகள் கலைப் பணிக்காக, மேடைமீது துணிச்சலுடன் தோன்றியதும், மன்டோதரியாக அழகாக நடித்ததும் போற்றத்தக்கது.

நமது நாட்டுக்கூத்துக்கு புதியபெருமை அளித்துள்ளார், இதைத் தயாரித்தளித்த கலாநிதி வித்தியானந்தன். அவரது இந்த நன் முயற்சிக்கு, கலைஅரசு கூறியதுபோல், தமிழர் பெரிதும் நன்றிசெலுத்தவேண்டும். இரு சிங்கள அதிகாரிகள் இதைக் கடைசிவரை இருந்துபார்த்து ரசித்தது குறிப்பிடத்தக்கது. கலைமூலம் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தலாமென்ற புது நம்பிக்கையும் ஏற்படுவதாக இருந்தது.

* *

அல்லாய்ப் பகவானாய் நீயே என்றும் ஆதிக்கவிலாயன் நீயேயென்றும், கல்லாலைந்தாயும் நீயேயென்றுங் கானத்திக் கற்பகமும் நீயேயென்றும், சொல்லாய்ப் பொருளாய் நீயேயென்றுஞ் சோற்றுத் துறையுறைவாய் நீயேயென்றும், செல்வாய்த் திருவாறை நீயேயென்றும் நின்றநெய்த் தானே வென் நெஞ்சனாய.

— அப்பர் அடிகள்

---

# அருத எண்ணெய்

பல்லாண்டு காலமாக பல்லாயிரக் கணக்கான பாவனையாளர்களுக்குப் பயன் நல்கி வரும் ஒரு அற்புதமான கூந்தல் தைலம்.

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த எண்ணெய்—அறுபதாம் பச்சை எனும் தமிழ் மூலிகையையும், வேறு ஆயுர்வேத மூலிகைகள் நாற்பத்துநான்கினையும் சேர்மானமாகக் கொண்டது.

உஷ்ணமான உடல் உள்ளவர்களுக்கும், உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும் அதிசயிக்கத் தக்க பலன் அளிக்கவல்லது! இதனை தலையில் தேய்த்த மாத்திரத்தில்.... கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளரும். தலைமயிர் உதிர்வதும், நரைப்பதும் நிற்கும் மூளைக்குக் குளிர்ச்சியும், கண்களுக்குப் பிரகாசமும் உண்டாகும். நீங்காத ஜலதோசமும், பீனிசமும் நீங்கும்.

அதுமட்டுமா?

கண் — தலை — காது — மூக்கு
சம்பந்தப்பட்ட சகல வியாதிகளும் குணமாகும்!

### விசேஷ குறிப்பு

பள்ளிப் பிள்ளைகளின் ஞாபகசக்தி பன்மடங்கு கூடவும், பரீட்சையில் நன்கு தேறவும் தினமும் தலைக்குத் தேய்த்து வாருங்கள்—
அருத எண்ணெய்!

—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—

தயாரிப்பாளர்:

## பி. எம். திசாநாயக்க

(நான்கு கோவில்களின் தர்மகர்த்தா)

அருத எண்ணெய் அலுவலகம்
கண்டிரோட், கம்பளை.

—யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்—

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மாந்துச் சரக்கு, வாசனதிகள் வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541, 7068)

குறிப்பு: மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் ஏஜன்டுகள் இல்லாத எல்லா ஊர்களிலும் விற்பனையாளர்கள் தேவை, விபரங்கட்கு விண்ணப்பிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாக்குறுதியை காப்பாற்றுவோம்'

—ஜி. ஜி

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழ் காங்கிரஸ் மீது உங்களுக்கு உள்ள ஆதரவு அதிகரித்துள்ளதென்பதை, இந்த மத்தியான வெய்யிலில், நீங்கள் பெருந்திரளாக கிரண்டு எனக்களித்த வரவேற்பின் மூலம் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். தேர்தலின் போது உங்களுக்கு அளித்த வாக்குறுதியின் படி நாங்கள் நடந்து தமிழ மொழியின் உரிமையை பெற பாடு படுவோம். விரைவில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில், தற்போதுள்ள அரசியல் நிலைமை பற்றியும், தமிழ் காங்கிரஸ் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விளக்கி கூறுவோம்"

என்று தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம், தமது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்து மாலையில் கூறினர். திரு. பொன்னம்பலத்தின் இல்லத்தில் நேற்று பெரும் திரளான மக்கள் கூடியிருந்தனர்.

இந்த மத்தியான வெய்யிலில் நீங்கள் எனக்கும், மற்றும் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் அளித்த மாபெரும் வரவேற்பிற்கு, எனது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றும் அவர் கூறினர்.

உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரம் பேசும் போது கூறியதாவது:-

'தமிழ் காங்கிரஸ் சார்பில் மூவர் பாராளுமன்றம் சென்றுள்ளோம். தமிழரசு கட்சி சார்பில் 14 அங்கத்தவர்களும் ஒரு முழு மந்திரியும் சென்றுள்ளார்கள். அவர்களிலும் பார்க்க தமிழுக்காக நாங்கள் அதிகம் பாடுபடுவோம்",

திரு. வி. அருணம்பலம், வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், திரு. எஸ். பாஸ்கரன், திரு. என். சிவநேசன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

## புகையிரத நிலையத்தில்

தமிழ்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று நண்பகல் யாழ்தேவி மூலம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வந்திறங்கிய போது ஆதரவாளர்களால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. உடுப்பிட்டி எம். பி திரு எம். சிவசிதம்பரம் தமிழ் காங்கிரஸ் தலைவருக்கு புகையிரத நிலையத்தில் மாலை சூட்டி வரவேற்றார். அதன் பின்னர் ஆதரவாளர்கள் மாலைசூட்டி வரவேற்றனர்கள்.

திரு. பொன்னம்பலத்துடன் வவுனியா எம். பி திரு ரி சிவசிதம்பரமும் வந்திருந்தார். முன்னாள் கிளிநொச்சி எம். பி திரு. ஏ. சிவசுந்தரம், திரு. எஸ் ஸ்ரீ பாஸ்கரன், திரு. என். சிவநேசன் மற்றும் பலர் இவ் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

மங்கள வாத்தியத்துடனும் நாகஸ்வரத்துடனும், திரு பொன்னம்பலம், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, பல வீதி வழியாக நல்லூருக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

கள்ளக் கடத்தல்

# 2 லட்சம் பெறுமதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டன

## பருத்தித்துறை கடற்கரையில் பொலிஸார் வேட்டை

மாவிட்டபுரம், புதன்

பருத்தித்துறையில் உள்ள வியாபாரிமூலை என்னுமிடத்திலுள்ள கடற்கரையில் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை இந்தியாவுக்குக் கள்ளக்கடத்தல் செய்ய முயற்சி செய்ததாகச் சந்தேகிக்கப்பட்ட நான்கு நபர்களை இன்று அதிகாலை பொலிஸார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். கள்ளக்கடத்தலில் ஈடுபடுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட லொறியைச் சுங்கப்பகுதியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டு பொலிஸார் காவல்புரிந்துவருகின்றனர்.

பருத்தித்துறை பொலிஸைச் சேர்ந்த சார்ஜன்ட்டுகள் நவரத்னம், முருகேசு, கிருஷ்ணன் ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டியொன்று தமக்குக் கிடைத்த தகவலின்பேரில் வியாபாரிமூலையிலுள்ள கடற்கரைக்குச் சென்று பரிசோதனையிட்டபோது வெள்ளிச் சலாகைகள், சிகரெட் லைட்டர்களுக்கு உபயோகப்படுத்தப்படும் கற்கள், மோட்டார்களில் பொருத்தப்படும் மின்சார 'ஹார்ன்கள்' பெருந்தொகையான தங்கைகள் ஆகியன 9 பைகளில் கட்டப்பட்டுக் கிடந்தன. சில பைகள் கடற்கரையிலும் சில கடற்கரைக்கு அண்மையிலிருந்த ஒரு வீட்டிலுள்ள காராஜ் ஒன்றில் நின்ற 4, ஸ்ரீ, 6153 இலக்க லொறியிலும் கிடக்கக் காணப்பட்டனவாம்.

இப்பொருட்கள் இந்தியாவுக்குக் கள்ளக்கடத்தல்செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டதாகச் சந்தேகத்தின்பேரில் பொலிஸார் லொறிச்சொந்தக்காரரான செல்லத்துரை என்பவரையும், லொறிச்சாரதி, லொறிக் கூலியாட்கள் இருவருட்பட நான்குபேரைக் கைது செய்துள்ளனர். லொறி சுங்கப்பகுதியினரின் பாதுகாப்பில் விடப்பட்டுள்ளது.

லொறியிலிருந்து இறக்கி, இப்பொருட்களைக் கள்ளக் கடத்தல் செய்ய முயற்சிக்கையிலேயே இவை கைப்பற்றப்பட்டதாக அறியப்படுகிறது.

கள்ளக்கடத்தல் முயற்சி இடம்பெற்றதாகக் கருதப்படும் இடம் பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்துக்கு அரை மைல் தூரத்துக்குள் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கள்ளக்கடத்தல் முயற்சி சம்பந்தமாகக் காங்கேசன்துறை பொலிஸ் சுப்ரின்டன் திரு. டி. ஏ. போனி, வடபகுதி சுங்கக் கலெக்டர் திரு. எம். ஆனிஸ் ஆகியோர் விசாரணை நடத்திவருகின்றனர்.

# ஷேக்குடன் சூ பேச்சு நடத்தினர்

பீகிங், மார்ச் 31

சீனப் பிரதமர் திரு சூ-என்-லாய் முன்னாள் காஷ்மீர் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லாவை இன்று அல்ஜீரியா தலைநகரான அல்ஜியர்ஸில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியதாக பீகிங்கிலிருந்து இன்றிரவு கிடைத்த கடைசி செய்தியொன்று கூறுகிறது.

# 6 ரடார் நிலையங்கள் நாசமாகின

## வியட்னாமில் மற்றுமொரு தாக்குதல்

சைகோன், மார்ச் 31

வட வியட்னாமில் காட்டு பிரதேசமொன்றில் நூற்றுக்கு அதிகமான அமெரிக்க தென் வியட்னாம் விமானங்கள் இன்று புதிதாக தாக்குதல்கள் நடத்தின. இத் தாக்குதலின் போது ஆறு ரடார் நிலையங்கள் முற்றாக நாசமாக்கப்பட்டன. இப்பிரதேசம் தீப்பற்றி எரிந்ததென்றும் பெருமளவு சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது.

சைகோனிலுள்ள அமெரிக்க தூதரகத்தை வியட்காங் கொரில்லாக்கள் நாசப்படுத்தியதற்கு இப் புதிய தாக்குதல் பதில் நடவடிக்கை அல்ல என்று அறிவிக்கப்பட்டது.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிமுதல் 8 மணிவரை ஸ்ரீமத் வி எஸ். எஸ். மணிபாகவதரைத் தலைமையாகவுடைய அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயப்பிரசார சபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் சமயப்பிரசங்கங்கள் நடைபெறும்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்: திரு. வி. க. ஆறுமுகம் "கடுத்தாட கொண்டமை" என்னும் பொருள் பற்றியும், நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் திரு வே. கார்த்திகேசு "ஆலய வழிபாடு" என்னும் பொருள் பற்றியும், நாயன்மார்காடு ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஆலயத்தில் திரு. த. சுப்பிரமணியம் "மார்க்கண்டேயர்" என்னும் பொருள்பற்றியும் உரை நிகழ்த்துவர்.

## நிர்வாகம் பற்றி விசாரணை

கொழும்பு, வியாழன்

பாராளுமன்ற நிர்வாகம் பற்றி விசாரணை நடத்துமாறு பாராளுமன்ற உத்தியோகத்தர்கள் சங்கம், பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

## தமிழரசுக்கிளை அங்குரார்ப்பணம்

வல்வெட்டித்துறை, வியா.

புதிய பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டதும் சமீபத்தில் ஏற்பட்ட கோரப் புயலினால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர்களுக்கு நிவாரண உதவி அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என்று பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு கே. துரைரத்தினம் வல்வெட்டித்துறையில் தமிழரசுக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கிளையின் அங்குரார்ப்பணம் திரு வ. வ. இராமசாமிப் பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. கே. துரைரத்தினம், தலைவர் வ. வ. இராமசாமிப்பிள்ளை, உப தலைவர்கள்: ச. அருணம்பலம், ஐ. துரைசிங்கம், இணைக்காரியதரிசிகள்: வ. பொன்னம்பலம், செ. அருணாசலம், பொருளாளர் செ. சுபாரத்தினம், பதின் ... நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# "சமாதான வாழ்வுக்கு கல்வி நிலையங்கள் வழிகாட்டி"

## யூனியன் கல்லூரி அதிபர் கருத்து

மாவிட்டபுரம், வியாழன்

"சமாதான வாழ்விற்கும் ஒத்துழைப்பிற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் கல்வி நிலையங்களே வழிகாட்டியாக அமையவேண்டும். இந்தஇலட்சியம் வெற்றிபெற்ருல் உலகத்தின் எதிர்காலம் மகத்தானதாக அமையும்."

இன்றிரவு நடைபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் தனது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு கே. கிருஷ்ணபிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

அதிபர் மேலும் கூறியதாவது:-

ஜனநாயக ஆட்சி நிலவுகின்ற எங்கள் நாட்டிற்கு உகந்தமான கல்விமுறை இன்றியமையாதது. மக்கள் ஆட்சியின் பலனை இலங்கை மக்கள் பூரணமாக அனுபவிப்பதற்கு கல்வித்திட்டம் மட்டும் போதாது, ஜனநாயகத்தின் பெருந் தத்துவத்தையும் கருத்தையும் விளங்குகின்ற மக்கள், சமுதாயத்திற்கு ஆணிவேர் போன்றவர்கள், அவர்களாலே தான் நாடுமுன்னேற முடியும் உயர்ச்சியடைய முடியும்.

நாடு உயர்ச்சியடைந்தால் மட்டும் போதாது, உலகம் முழுவதுமே மேம்படவேண்டும் எமது சர்வதேச இயக்கத்தைப் பெரிதும் விரும்புகின்ற சான்ருேர் கருதுகிறார்கள். அவர்களுடைய இலட்சியம் செவ்வனே உருவாக வேண்டுமானுல் சமாதான வாழ்விற்கும் ஒத்துழைப்பிற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் கல்வி நிலையங்களே வழிகாட்டியாக அமைய வேண்டும். இந்த லட்சியம் வெற்றி பெற்ருல் உலகத்தின் எதிர்காலம் மகத்தானதாக அமையும்.

ஆகவே கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும் பெரும்பொறுப்பு இருக்கின்றது என்பது தெளிவு.

கல்வியதிகாரிகள் எமக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அளிக்கிறார்கள். அவ் வசதிகள் நல்ல முறையில் பயன்படுவதற்கு நாம் ஆவன செய்து வருகின்றோம், அத்துடன் பெற்றோரும் தங்கள் பெரும் பொறுப்பை உணர வேண்டும் எங்களுடைய பொறுப்பில் நாளொன்றுக்கு மாணவர்கள் எட்டு மணிநேரம் மாத்திரம் இருக்கிறார்கள். இந்தக்கால நேரத்தில் மாணவர்களுக்குக் கல்வியைப் போதிப்பதோடு நில்லாமல் சில பாரம்பரியங்களையும் மரபுகளையும் அவர்கள் உணர வைக்கப் பெரிதும் முயல்கின்ருேம். வெறும் ஏட்டுப் படிப்பு மாணவர்களின் ஒழுக்கத்திற்கும் ஆசாரத்திற்கும் போதாது. ஆகவே தான் நாங்கள் இங்கு உருவாகும் கல்லூரி பாரம்பரியத்துக்குப் பெற்றோரும் முக்கிய கவனம் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். மாணவர் பள்ளிப்படிப்பை முடித்த பின் வெளியுலகத்தில் பிரவேசிக்கும் பொழுது இப்பாரம்பரியங்கள் அவர்களுக்குப் பெரிதும் உதவியாய் அமையும் மாணவருடைய ஒழுக்கத்திற்குச் சமயமறிவும் ஆழ்ந்த பக்தி பக்தி உணர்ச்சியும் வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

பரந்த அறிவு பக்தி உணர்ச்சி, சிறந்த பண்பு ஆகியவை நிரம்பப்பெற்ற எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் மக்களாட்சி முறையை வலியுறுத்தச் செய்வதே எங்கள் நோக்கம்.

## பாலம் . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

டின சபைத் தலைவரும் கப்பல் ஏஜன்டுமான திரு க. கிருபாமூர்த்தி, திரு. பெரேராவை வரவேற்று துறைமுகத்தில் பாலம் ஒன்று கட்டுவதன் மூலம் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்கலாமென்றும் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்படும் இடநெருக்கடியை இங்கு கப்பல்களை அனுப்புவதன் மூலம் சமாளிக்கலாமென்றும் கூறினர்.

திரு. பெரேரா இதற்குப் பதிலளிக்கையில் துறைமுகத்தில் பாலம் கட்டுவதனுல் அதிக பயன் கிடைக்குமென்றும் இதுசம்பந்தமாக தாம் முயற்சி செய்வதாகவும் சொன்னுர்.

ஓரே முறையில் காங்கேசன் துறைக்கு இரு கப்பல்களை பரீட்சார்த்தமாக அனுப்பவிருப்பதாகவும் இதுவெற்றியளித்தால் அதன்பின் ஒவ்வொரு முறையிலும் இரு கப்பல்களை அனுப்புவதாகவும் தெரிவித்தார் தொடர்ந்து இங்கு கப்பல்களை அனுப்பி வைக்கநடவடிக்கை எடுப்பதாகவும் திரு பெரேரா கூறினுர்

## யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

### பாலபண்டித, பண்டித வகுப்புக்கள்

மேற்படி வகுப்புகள் 3-4-65 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பமாகும். வகுப்பிற் சேரவிரும்புவோர் அத்தினம் வித்தியாலயத்துக்கு வந்து தங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளலாம்.

ஆர். எஸ். பாமர்
காரியதரிசி.

கல்விக்கந்தோர்
யாழ்ப்பாணம்.
31-3-65 1914

பிரபல தென்னிந்திய பின்னணிப் பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
அவர்களின்
இன்னிசைக்கச்சேரி
இன்றுமாலை 6-30 மணிக்கு
யாழ். திறந்தவெளி அரங்கில்
திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி.; எம். பி.
அவர்கள் தலைமையில் நடைபெறும்
டிக்கட் விபரம்: போஷகர் 25/-
1-ம் வகுப்பு-15/- 2-ம் வகுப்பு-10/- 3-ம் வகுப்பு-5/-
103

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org